ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ இன்பம் பயக்க ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இன்பம் பயக்க ॥

திருவாறன்விளை சென்று எம்பெருமானைக் கண்டு ஆழ்வார் அடிமை செய்யக் கருதுதல்

‡இன்பம் பயக்க எழில் மலர்
மாதரும் தானும்⋆ இவ்வேழ் உலகை⋆
இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து⋆
ஆள்கின்ற எங்கள் பிரான்⋆
அன்புற்றமர்ந்துறைகின்ற⋆ அணி பொழில்
சூழ் திருவாறன் விளை⋆
அன்புற்றமர்ந்து வலம் செய்து⋆
கை தொழும் நாள்களும் ஆகுங்கொலோ (1)

ஆகுங்கொல் ஐயம் ஒன்றின்றி⋆
அகல் இடம் முற்றவும்⋆ ஈர் அடியே
ஆகும் பரிசு நிமிர்ந்த⋆
திருக்குறள் அப்பன் அமர்ந்துறையும்⋆
மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு⋆
மதிள் திருவாறன் விளை⋆
மா கந்த நீர் கொண்டு தூவி வலஞ்செய்து⋆
கை தொழக் கூடுங்கொலோ (2)

கூடுங்கொல் வைகலும்⋆ கோவிந்தனை
மதுசூதனைக் கோளரியை⋆
ஆடும் பறவை மிசைக் கண்டு⋆
கை தொழுதன்றி அவன் உறையும்⋆
பாடும் பெரும் புகழ் நான்மறை வேள்வியைந்து⋆
ஆறங்கம் பன்னினர் வாழ்⋆
நீடு பொழில் திருவாறன் விளை தொழ⋆
வாய்க்குங்கொல் நிச்சலுமே (3)

www.prapatti.com

வாய்க்குங்கொல் நிச்சலும்⋆ எப்பொழுதும்
மனத்தீங்கு நினைக்கப்பெற⋆
வாய்க்கும் கரும்பும் பெரும் செந்நெலும்⋆
வயல் சூழ் திருவாறன் விளை⋆
வாய்க்கும் பெரும் புகழ் மூவுலகீசன்⋆
வட மதுரைப் பிறந்த⋆
வாய்க்கும் மணி நிறக் கண்ண பிரான் தன்⋆
மலரடிப் போதுகளே (4)

மலரடிப்போதுகள் என் நெஞ்சத்து⋆ எப்
பொழுதும் இருத்தி வணங்க⋆
பலர் அடியார் முன்பருளிய⋆
பாம்பணையப்பன் அமர்ந்துறையும்⋆
மலரின் மணி நெடு மாடங்கள் நீடு⋆
மதிள் திருவாறன் விளை⋆
உலக மலி புகழ் பாட⋆ நம்மேல் வினை
ஒன்றும் நில்லா கெடுமே (5)

ஒன்று நில்லா கெடும் முற்றவும் தீவினை⋆
உள்ளித் தொழுமின் தொண்டீர்⋆
அன்றங்கமர் வென்றுருப்பிணி நங்கை⋆
அணி நெடும் தோள் புணர்ந்தான்⋆
என்றும் எப்போதும் என் நெஞ்சம் துதிப்ப⋆
உள்ளே இருக்கின்ற பிரான்⋆
நின்ற அணி திருவாறன் விளையென்னும்⋆
நீள் நகரம் அதுவே (6)

நீணகரம் அதுவே மலர்ச்
சோலைகள் சூழ்⋆ திருவாறன் விளை⋆
நீணகரத்துறைகின்ற பிரான்⋆ நெடுமால்
கண்ணன் விண்ணவர் கோன்⋆
வாண புரம் புக்கு முக்கட் பிரானைத்⋆ தொலைய
வெம் போர்கள் செய்து⋆



www.prapatti.com

வாணனை ஆயிரம் தோள் துணித்தான்⋆ சரண்
    அன்றி மற்றொன்றிலமே (7)

அன்றி மற்றொன்றிலம் நின் சரணே என்று⋆
    அகல் இரும் பொய்கையின்வாய்⋆
நின்று தன்நீள் கழல் ஏத்திய⋆ ஆனையின்
    நெஞ்சிடர் தீர்த்த பிரான்⋆
சென்றங்கினிதுறைகின்ற⋆ செழும் பொழில்
    சூழ் திருவாறன் விளை⋆
ஒன்றி வலஞ்செய்ய ஒன்றுமோ⋆ தீவினை
    உள்ளத்தின் சார்வல்லவே (8)

தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித்⋆
    தெளி விசும்பேறலுற்றால்⋆
நாவினுள்ளும் உள்ளத் துள்ளும்⋆ அமைந்த
    தொழிலினுள்ளும் நவின்று⋆
யாவரும் வந்து வணங்கும் பொழில்⋆
    திருவாறன் விளை அதனை⋆
மேவி வலஞ்செய்து கை தொழக் கூடுங்கொல்⋆
    என்னும் என் சிந்தனையே (9)

சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை⋆
    தேவ பிரான் அறியும்⋆
சிந்தையினால் செய்வ தான் அறியாதன⋆
    மாயங்கள் ஒன்றும் இல்லை⋆
சிந்தையினால் சொல்லினால் செய்கையால்⋆ நிலத் தேவர்
    குழு வணங்கும்⋆
சிந்தை மகிழ் திருவாறன் விளையுறை⋆
    தீர்த்தனுக்கற்ற பின்னே (10)

‡தீர்த்தனுக்கற்ற பின்⋆ மற்றோர்
    சரண் இல்லை என்றெண்ணி⋆ தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனன் ஆகிச்⋆
    செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

தீர்த்தங்கள் ஆயிரத்துள்⋆ இவை பத்தும்
வல்லார்களை⋆ தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து
நல்கி உரைப்பர்⋆ தம் தேவியர்க்கே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com